# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/24 - 2015 දෙසැම්බර් මස 30 වැනි බදාදා - 2015.12.30

*1947/24 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மேல், இக்கட்டளை மூலம் இலங்கைக் களனிப் பல்கலைக்கழகத்தை தாபிக்கின்றதும், அக்கட்டளை மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாகக் கருதப்படுவதும் (2015, மாச்சு மாதம் 31 ஆந் திகதிய 1908/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான) கட்டளையை அதற்கான அட்டவணையில் அதன் நிரல் I இலும், நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்ற “வர்த்தக மற்றும் முகாமைத்துவத்துறை” என்னும் பதிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் திருத்துகின்றேன்:-*

| *“நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *கணினி மற்றும் தொழில் நுட்பவியல் துறை* | *1. மென்பொருள் பொறியியல் துறை* |
| | *2. கணினி அமைப்புகள் பொறியியல் துறை* |
| | *3. பிரயோக கணினித்துறை”.* |

*லக்ஷ்மன் கிரியெல்ல,*
*உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2015, திசெம்பர் 23.*

*1 - 532*




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*